பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை: சதம் 75

மட்டக்களப்பில்
சகாயவிற்பனை
30-7-81 மட்/மாமாங்கப்
பிள்ளையார் கோவில்
ஆடி அமாவாசை தீர்த்தத்திருவிழாவில்
மில்க்வைற்
தயாரிப்புக்கள் யாவும் சகாய
விற்பனையுடன் அன்பளிப்புகளும்
வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்
புக்களின் மேலுறைகள் சேகரித்து
வைத்திருப்போர் அங்கு எமது விளம்
பர வாகனத்தில் கொடுத்து பெறுமதி
வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்
கொள்ளலாம்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

ஈழநாடு
THE EELANADU
மலர் 23 ஆடி 4 றம்ழான் 16 இதழ் 155
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19-7-1981

உற்சாகமும் புத்துணர்வும்பெற
பாவியுங்கள்!
அண்ணா கோப்பி
மின்சார றோஸ்டரில்
உங்கள் முன்னிலையில்
வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவில்
பெற்றுக்கொள்ள
விஜயஞ்செய்யுங்கள்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம் - சுன்னாகம்

### அரசிடம் கூட்டணி சமர்ப்பித்த 5 கோரிக்கைகள்:

# 3 மாதத்தில் நிறைவேறாவிட்டால்

# புதிய போராட்டத் திட்டம்

## பொதுச்சபை தீர்மானம்

### 'அமிர்' மீதான விவாதம் பற்றி பாராளுமன்றக் குழு முடிவுசெய்யும்

(நமது நிருபர் செ. குருபாதம்)

**எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்மீது அரசு எம். பி. க்களினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில், கூட்டணி எம். பி. க்கள் கலந்து கொள்வதா இல்லையா என்பதை, கூட்டணியின் பாராளுமன்றக் குழு முடிவு செய்ய வேண்டும் என்று, நேற்றுக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை முடிவு செய்துள்ளது.**

**கூட்டணியின் பாராளுமன்றக் குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடி முடிவுசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இதே நேரத்தில்; கூட்டணியின் பாராளுமன்றக் குழு அரசுக்கு சமர்ப்பித்த 5 அம்சக் கோரிக்கை சமபந்தமாக 3 மாத காலத்துக்குள் அரசு பதில் தராவிட்டால், புதிய போராட்டத் திட்டங்களை கொண்டுவர வேண்டும் என்றும் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு நல்லூர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கிளைக் காரியாலயத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சபை உறுப்பினர்களில் சுமார் 90 பேர் சமுகம் அளித்திருந்தனர்.

வவுனியா அபிவிருத்திசபை தலைவர் திரு. எம். சிற்றம்பலம், மட்டக்களப்பு அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தியும், யாழ் அபிவிருத்திசபை உறுப்பினர்களான திருவாளர்கள் சோமசுந்தரம், சின்னத்துரை, அழகையா, பூபாலசிங்கம், நாகராசா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

பொதுச்சபைக் கூட்டம்
[6ம் பக்கம் பார்க்க]

## தமிழர் கூட்டணியின் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு

### தொழிலாளர் கட்சியின் தேசியக்குழு அறிக்கை

[கொழும்பு]

மே மாதம் 31ம் திகதியும் அதைத் தொடர்ந்து ஒருவார காலமாகவும் யாழ்ப்பாணம் பயங்கர ஆட்சிக்குட்பட்டிருந்த வேளையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் கோரி பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வரும் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்களின் நடவடிக்கைகளை மாபெரும் தொழிலாளர் கட்சி அமைப்புக்கான தற்காலிகத் தேசியக்குழு ஆதரித்துள்ள அதே வேளையில் இம்மாதிரி விடயங்களில் அரசாங்கம் முன்பு நடந்துகொண்டுள்ள போக்கின்படி இக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்பதில் சந்தேகமும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம் பெற்ற வன்முறைசம்பவங்கள் தொடர்பாகக் கண்டனம் தெரிவித்து மேற்படி குழு வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் குழுவின் இணைச் செயலாளர்களான

[ . . . பார்க்க]

### 4000 பேர் பலி

பீக்கிங். ஜூலை, 18

சீனாவின் தென் மேற்கு மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 4000பேர் பலியானார்கள். [து]

### 300பேர் பலி!

பெய்ரூத், ஜூலை, 18

லெபனன் மீது இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் நேற்று மீண்டும் நடத்திய தாக்குதல்களில் 300 பேர் பலியானார்கள் 800பேர் காயமடைந்தனர்.

## ரூ. 1,25,000 பீடி இலை மூடைகள் பறிமுதல்!

[யாழ்ப்பாணம்]

பொலிசாரும், சுங்கப்பகுதியினரும் நேற்று அதிகாலை நடத்திய 'வேட்டை'யில்; ஐயாயிரத்து ஐநூறு றாத்தல் நிறையுள்ள பிடிப்புகையிலை கொண்ட 45 பீடிஇலை மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியன இந்த பீடி இலைகள் நாவாந்துறையில் கைப்பற்றப்பட்டன. இந்தபீடி இலை மூடைகள் இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

இக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்ட இரண்டு வள்ளங்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

சிங்கப்பூர்
வேலை வாய்ப்புகள்
சிங்கப்பூரில் ஆண் - பெண் இருபாலாருக்கும்
சகல தரங்களிலும் தொழிற்சாலை
ஊழியர்களாக வேலை வாய்ப்புகள்!
பாஸ்போர்ட்டுடன் நேரில் வரவும்.
அத்துடன் ஹைடல்பேர்க் (ஜெர்மன்)
உருளை எழுத்து அழுத்த இயக்குநர்
இருவர் உடன் தேவை
யூனைட்டெட் இலெக்ரோனிக் எஞ்சினியரிங்
கோப்பரேஷன் PTE LTD.
(சிங்கப்பூர்)
மே.பா.ட்ரான்ஸ் குளோபல்
[TRANS-GLOBAL]
3-வது மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்,
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8007
0381

துள்ளும் பருவத்தினரும்... துவளும் பருவத்தினரும்
விரும்பி வாங்கி உல்லாச சவாரி செய்வது,
HONDA ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள்
விரும்பிய நிறங்களில், புதிய மொடல்களில்
ஹொண்டா C90; C50; CD125T; CB125JX; CD90;
CD50 பழைய விலைகளில் யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.
வட இலங்கையில் மற்றுமொரு வியாபாரிகள்
மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்;
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8267

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பராய் காட்டுவைரவர் கோவிலுக்கு அருகாமையில் பலாலி றோட்டில் இருந்து அரைமைல் தூரத்தில் 88 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். வ. கணேசானந்தன், சட்டத்தரணி, வட்டுக்கோட்டை. 0373

MF 240 புதிய உழவு இயந்திரம், பெட்டி கலப்பையுடன் மலிவு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி ஸ்ரனிஸ்லொஸ், புனித மரியாள் ஆலயம், அடம்பன், மன்னார், மாவட்டம் 0319

காரைநகரில் சிவன்கோவிலுக்கு கிட்டுமான தூர 18 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. செ. சண்முகலிங்கம், 854/7 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் 0332

நல்லூர் பண்டாரக்குளம் வீதியில் பரப்பு 3 குளி குடியிருப்பதற்கேற்ற காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: M. S. குணராசா, தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி 0352

(1) நசனல் பனசோனிக் கசற் றெக்கோடர், 2) "YASHICA" 35 MM கமரு இலக்ரோனிக் பிளாஸ் உடன் 90/4 கல்லூரி வீதி, நீராவியடி 0356

தாவடி-இணுவில் ஒழுங்கையில் எட்டு பரப்பு தோட்டமாக்கக்கூடிய, சுமார் 200 பனை கொண்ட பனங்காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும். வ. ஆறுமுகராஜா, மதனடி, சதுக்கம், மானிப்பாய் 0357

ட்ராக்டர் (Tractor) பெட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: ஈஸ்வரன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி. 0307

கிளிநொச்சியில் கண்டி வீதிக்கும் றெயில் பாதைக்குமிடையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக 1/2 ஏக்கர் காணி இது அரசாங்கத்தால் சுயவிடமைப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்டது. நல்ல சுற்றுடல் தொடர்பு: க சின்னத்தம்பி, ஒலிபெருக்கி உரிமையாளர், புதிய டவுன் நிலையம், கண்டி வீதி, கிளிநொச்சி 0372

வட்டக்கச்சி சில்வா றோட் சந்தியில் நல்ல நிலையிலுள்ள மில் விற்பனைக்குண்டு. லிஸ்டர் இன்ஜின், அல்லர், குருண்டர் கால் ஏக்கர் காணியுடனும் சகல உபகரணங்களுடனும் தொடர்புகொள்ளவும்: 131, ஸ்டேசன் றோட், வவுனியா. 0364

சுண்டிக்குளியில் 7 பரப்புக் காணி பிரபல பாடசாலைக்கு அருகாமையில் உடன் விற்பனைக்குண்டு. கூடிய விலை கோருபவர்க்கு கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை) தொடர்பு: டாக்டர் துரைராஜன், 41/1 கொழும்புத்துறை றோட், சுண்டிக்குளி. 0318

## விற்பனைக்கு

26 ஆசனங்கள் உள்ள 1978 மொடல் டெல்வேட்டர் கோஸ்டர் மினிபஸ் விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு பார்வையிடலாம். தொடர்புகொள்ளவும்: அசோகபவான், 112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 0351

5 ஸ்ரீ வோக்ஸ்வகன் கார் நல்லநிலையில் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும் JASE INSTITUTES, Stanley Road [opp. Bank] 0331

உடுவில் டச் றோட்டிலிருந்து சுந்தரோடைக்குச் செல்லும் றோட்டில் 70 யார் தூரத்தில் இசைப்புலவர் திரு. ந சண்முகரத்தினம் அவர்களின் வீட்டுக்குத் தெற்குப்புறமாக வீடுகட்டக்கூடிய 4 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு R. குமாரசாமி, பென்சனர், விநாயகமுதலியார் இடம். பருத்தித்துறை 0363

புத்தம்புதிய G I. Pipe 4" 8'; 7'; 6' [இரண்டு ரகங்கள்] விற்பனைக்குண்டு உடன் தொடர்புகொள்ளவும்: JASE INSTITUTES, Stanley Road, Jaffna. 0330

வட்டுக்கோட்டை சந்தியில் உள்ள புதநீர்க்கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்குண்டு விபரங்களுக்கு K. வாமதேவன், வட்டுக்கோட்டை சந்தி, வட்டுக்கோட்டை. 0342

## சோதிடம்

சாதகக் குறிப்புகள், கைரேகை; எண்சோதிடம்; விவாகப் பொருத்தங்கள் சிறந்த முறையில் கணித்தும் ஆராயப்படும் பலன் தெரிவிக்கப்படும் தொடர்பு கொள்ளவும் செல்வான் சோதிட நிலையம் 478/2 கே கே எஸ் வீதி சிவலிங்கபுளியடி யாழ்ப்பாணம். 0339

## வாடகைக்கு

நான்கு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ், மனோகரா தியேட்டருக்கு அண்மையில் வாடகைக்கு உண்டு. இரண்டு வருட குத்தகைக்கு மட்டும் விடப்படும். அரசாங்க டாக்டர் பொறியியலாளர்கள் விரும்பத்தக்கது. முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல; 0264 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0264

சகல வசதிகளுடனும் தளபாடங்களுடனும் தற்பொழுது வியாபாரம் நடக்கும் பலசரக்கு கடை வாடகைக்குண்டு வேலுப்பிள்ளை, 105, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம் தொலைபேசி: 536 0371

## சேவை

காணிகள் வீடுகள் வாங்க விற்க தகுந்த அனுபவமும் திறமையும் உள்ள ஆலோசகருடன் தொடர்பு கொள்ளவும் செல்வஸ் ஆலோசகர் நிலையம் 478/2 கே கே. எஸ், வீதி சிவலிங்கபுளியடி யாழ்ப்பாணம். 0338

## தேவை

பற்றறி சீர்செய்வதில் அனுபவமுள்ள இருவர் தேவை. வேலைக்கு ஏற்ற சம்பளம் உடன் சந்திக்கவும். துரை அன் கோ 23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0365

ஸ்ருடியோவுக்கு அனுபவமுள்ள எழுதுவினைஞர் தேவை, ஆங்கில அறிவுள்ள திடகாத்திரமானவர் எதிர்பார்க்கப்படுகிறார், ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் விரும்பப்படுவர் 30-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். பிறின்ஸ் ஸ்ருடியோ கே. கே எஸ். றோட், சுன்னாகம். 0361

வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள்ளோ அல்லது சுற்றுப்புறங்களிலோ இரண்டு அல்லது மேற்பட்ட படுக்கை அறைகளுடன். தொடர்பு கொள்க விளம்பர இல: 0353 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 0350

முத்திரை விசேஷ சேகரிப்பாளராக முதற்படி - பாவிக்கப்படாத 4 முத்திரைகள் கொண்ட 1937 — 1967 வரை வெளியிடப்பட்ட 11 வகை (44) பிரத்தியேக முத்திரைகளை ரூ. 20/-க்கு வாங்கலாம். ஞாயிறு நண்பகல் வெளிக்கப்படும். K N V சேவோன் 3, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 0350

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு, வெல்டிங் வேலைகளில் நன்கு தேர்ச்சிபெற்ற வெல்டர் இருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் மாதமொன்றிற்கு 1000 ரூபா வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 0348, C/o ஈழநாடு லிமிடெட். யாழ்ப்பாணம். 0348

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

### அரிசி ஆலை இயந்திர இயக்குநர் பதவி

எமது சங்கத்தால் பரந்தனில் (மின்மோட்டரில்) இயக்கப்பட்டுவரும் அரிசி ஆலையில் இயந்திர இயக்குநர் பதவிக்கு அனுபவம் வாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்பவர் பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு 25-7-81க்குப் பிந்தாமல் அனுப்புதல்வேண்டும்

வயது—30—45 வரை

அனுபவத்துக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன். 0359


புதிய [Brand New] 1981 மொடல்

# மிற்சுபிசி றோசா

## (MITSUBHISI ROSA)

(மினிபஸ்கள்)

விலை ரூ. 3,15,000/-

(விநியோகம் 4 வாரங்கள்)

வித்யா மோட்டோர்ஸ்

68, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7255 (0345)


## பண்டத்தரிப்புப் பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

## பகிரங்க ஏல விற்பனை

பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பொருட்கள் 25-07-1981, 26-07-1981 ஆகிய இரு தினங்களிலும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

25-07 1981 சனிக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை நடைபெறும்

1. உஷா (Usha) தையல் இயந்திரங்கள் 04 தனி
2. பிறதர் (Brother) தையல் இயந்திரங்கள் 02 தனி
3. ஸ்ருவாட் (Stuard) தையல் இயந்திரம் 01 தனி
4. சிங்கர் (Singer) தையல் இயந்திரங்கள் 11 தனி

26-07-81 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை நடைபெறும்

1. மேசைகள் நீளம் 10' அகலம் 03' 20 தனி
2. வாங்குகள் நீளம் 10' 50 தனி

மேற்படி பொருட்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பொருட்களைப் பெற்றவர்கள் சங்க பிரதம காசாளரிடம் முழுப் பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று அன்று மாலை 5-30 மணிக்கு முன்னர் பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்

பொதுமுகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

17-07-1981 0370


காணி விற்பனை

* திருநெல்வேலி/THIRUNELVELY
  2, 2½ இரண்டு துண்டுக் காணிகள் உடன் விற்பனைக்குண்டு நல்ல சுற்றுடல். எல்லா வசதிகளும் நிறைந்த காணி.
* கல்வியங்காடு/KALVIANKADU
  மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடும், வளவும் உடன் விற்பனைக்குண்டு. நல்ல சுற்றுடல் சந்தை, போக்குவரத்து வசதிகளுடன் அமைந்தது.
* நுணாவில்/NUNAVIL
  கண்டி வீதியில், நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
* பிறவுண் வீதி/BROWN ROAD
  இரண்டு பரப்புக் காணி. நான்கு பக்கமும் மதில் கட்டப்பட்டுள்ளது. கிணறும் உண்டு. உடனடி விற்பனைக்குண்டு.
* கைதடி/KAITHADY
  நாற்பத்தெட்டுப் பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு கைதடி பனைக் கழகத்தின் முன்பாக உள்ளது. போக்குவரத்து வசதிகளுடன் அமைந்தது.

வாடகைக்கு

* யாழ்ப்பாணம் கொட்டடி/KODDADY
  இரண்டு அறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.
* கிளிநொச்சி/KILINOCHCHI
  நவீன வசதிகளுடன், தளபாடங்களுடன் கண்டி வீதியில் கடை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.

தொடர்பு கொள்க :

காணி விற்பனைப் பகுதி
(Real Estate Division)

TFC தா பினான்ஸ் கம்பெனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 7680



நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
போன்: 7199. தத்தி வைரம்.

## இன்று விபுலாநந்த அடிகள் 34ம் ஆண்டு நினைவு தினம்

# மட்டுநகர்தந்த முத்தமிழ் வித்தகர்

வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப்பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி
உத்தமனார் வேண்டுவது

அடிகளார் இயற்றிய "ஈசனுவக்கும் மலர்" என்னும் தொகுதியிலுள்ள இந்தப் பாடல் மட்டக்களப்பு விவேகானந்த வித்தியாலயத்தின் அண்மையிலுள்ள ஆலமரத்தின் அருகில் நிறுவிய சமாதியில் எழுதப்பட்டுள்ளது.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரவர்கள் அடிகளாரை நினைந்துருகிப் பாடிய பாடலில் ஒன்று.

தனியான செந்தமிழும்
ஆங்கிலமும் வங்கமும்
சமய நூலும் முனியாது
துறை போகக்கற்றறிந்து
தத்துவ நூல் முழுதுந்தேறித்
தனியாகும் யாழ்
தொடக்கைத் துடைத்த
முனியாகி யொரு
துணையாய் நின்றுய்
இனியாரே இனியாராய்
மற்றெமக்குத்
துணையாவார் இயம்பு
வாயே!

யாழ்ப்பாணத்தில் சில காலம் வாழ்ந்து பலரோடு நெருங்கிப் பழகிய அடிகளார் ஆறுமுகநாவலர் அவர்களை பெருவாக மதித்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் என்னும் பட்டம் வழங்கிய பெருமையைக் கூறும் பாடல் ஒன்று:

"பாவலர் போற்றும்
ஞானதேசிகரைப்
பணிந்தவர் ஆணையின்
வண்ணம்

பூவலர்கொன்றை
புனைந்தவர் புகழைப்
புலமிகு மதிவர்
கூட்டுண்ணக்
காவலர் வியப்ப
உரைத்திடல் கேட்டுக்
கருணை கூர் தேசிகர்
இவர்க்கு
'நாவலர்' எனும் பேர்
தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகும்
தகும் என்ன.

விபுலாநந்த அடிகளார் அண்ணாமலையில் பேராசிரியராய் இருந்த காலத்தில் விரிவுரையாளராய் இருந்த நண்பர் கந்தசாமி என்பவர் இளம் வயதிலே மாரடைப்பு நோயால் இறந்த போது அடிகளார் ஈமயத்தில் "பிரபுத்த பாரத" என்ற சுவாமி விவே

### க. சி. குலரத்தினம்

காநந்தரால் தொடக்கப்பட்ட ஆங்கிலச் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்தார்.

இறந்தசெய்தியைக் கேட்டு வருந்திய அடிகளார் கலங்கிக் கவிதை புனைந்து கங்கையை அமரரிடம் தூதுவிடுப்பதாக "கங்கையில் விடுத்த ஓலை" என்ற பாடல்களில் சில.

"கந்தசாமிப் பெயரோன் வேட்களத்திலென்னைக் கண்ட நாள் அன்பென்னும் கயிறு கொண்டு பிணித்தான். அந்த நாள் முதலாக நட்புரிமை பூண்டோம் அண்மையில் யான் வடநாடு நண்ணியதை அறிந்தே.

நம்மடிகள் உறைகின்ற
தவப்பள்ளியாது
நற்றவத்தோர் முகவரியா
தென வினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்தி
பொதி ஓலையொன்றுவிடுக்கச்
சிந்தை வைத்தான் என
வெவ்வகோர் அன்பறி
வித்தான்
ஒருநாள் சதிபுகுவினர்
மாரடைப்பு நோயால்
ஊனுடலம் பாரில் விழ
வானுலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பனெனும்
அவல உரை செவியில்
கனற்பிழம்பாய் புகுந்து
உளத்தை உருக்கிய அப்
பொழுதில்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர் பி. எஸ் சி. லண்டன் பட்டம் பெற்றவர் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் விவேகாநந்த ஆசிரமம் அமைத்து பல தொண்டர்களின் மனதைக் கவர்ந்தவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் 1924-ம் ஆண்டு மக்கள் குலத்துக்கு பணிபுரிய துறவு பூண்டார். தமிழ்ப்பணி, சமயப்பணி, சமூகப்பணி முதலிய பல தொண்டுகளிலும் உச்சநிலை எய்தியவர்.

விபுலாநந்த அடிகளார் கிழக்கு மாகாணத்தில் உதித்த சுடரொளி வடக்கிலும், கிழக்கிலும், நாடு முழுவதிலும், பாரதநாட்டிலும் பல துறைகளில் பிரகாசித்தவர். பல மொழிகளை நன்கறிந்தவர். இருபெரும் பல்கலைக்கழகங்களில் முதன்முறையாகத் தமிழ்ப்பேராசிரியராகப் பதவியை மதிப்புடன் வகித்தவர். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் தம்மை உருவாக்கினவர் அடிகளாரென்று பெருமைப்படுவதானால் அடிகளாரின் கல்விப்பணியின் பெருமை என்னே!

மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வந்தபோது, யாழ்ப்பாண வாலிப மாநாட்டின் தலைவராக இருந்து காந்தியடிகளின் பேருரைக்குத் தலைமை தாங்கியவர்.

அறிஞர் ஹண்டி பேரின்பநாயகம் அடிகளாரைப் பற்றிச் சொல்லியது:

பாரதியார் பாட்டுகளை இலங்கையிலும் தமிழகத்திலும் துணிச்சலுடன் பரப்பியவர் அடிகளார். அவர் பாடியபடி பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தவர். ஷேக்ஸ்பியர் கருத்தை தமிழில் "மதங்க சூளாமணி" என்னும் நாடக நூலில் வெளியிட்டவர். படிக்கும் தமிழர்கள் பேரானந்தம் அடைவர் என்பதில் தடையில்லை.

தமிழையே கல்விக்கும், நிர்வாகத்துக்கும் உரிய மொழியாகத் தமிழ் மக்கள் கொள்ள வேண்டுமென பேரவாக் கொண்டவர். இரசாயன சாத்திரத்துக்குரிய தமிழ்ச் சொற்களை தொகுத்துதவியவர்"

உலகமே அதிசயிக்கும் வண்ணம் யாழ். நூலை அரங்கேற்றிய அடிகளாரை வாழ்த்திய புலவர்கள் எண்ணுக்கடங்கார்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய பாட்டு இது:

"எங்கணும் இசைக்கதிர்
விரித்திருள்
அகற்றிடும் ஞான
சூரியனானாய்,
ஏரியிலோ புனலிலே
சிதலிலோ மண்ணிலோ,
இல்லாது போனவிசை
நூல்
இங்கனு லகத்திலே நிலை
நிற்க அருள்செய்த
அடிகளே நிலைவருளாய்
ஐயடைத் தொல்லை தபு
செம்புலச் செல்வவிபு
லாநந்த ஞான குருவே!
நவநீத கிருஷ்ண
பாரதியார் பாடிய
பாட்டு இது!
ஸ்ரீராம கிருட்டினனார்
ஞான நடை

## நாடும் நடப்பும்

ஆஜானுபாகுவான தோற்றம். சுமார் ஆறடி உயரம். நல்ல சிவப்பு நிறம். சாந்தம் தவழும் முகம் வெளிநாட்டவர். ஒரு திருமணவைபவத்துக்கு வந்திருந்தார் அவருடன் கூட ஒரு தமிழ்ப்பெண். சுமாரான அழகி அவருடைய மனைவி எல்லோருடைய கண்களும் அந்த ஜோடியையே நோக்கின.

பின்னர் அவரைப்பற்றி விசாரித்ததில் கிடைத்த தகவல் சுவையானவை.

அந்த ஆணழகன் மச்சமாமிசமே சாப்பிடுவதில்லை கேக்கில் முட்டை கலந்திருக்கு மென்பதால் கேக்கூடச் சாப்பிடமாட்டார். யாருடனும் அதிகம் பேசமாட்டார். அந்தந்த நேரத்தில் தவறுமல் தேவாலயத்துக்குச் சென்று பிரார்த்தனையில் கலந்து கொள்வார். அவர் ஒரு பொறியியலாளர். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர் அவரது தந்தையார் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் சிறு காலத்தில் மேற்கு ஜெர்மன் சென்று வேலை பார்த்த தந்தை ஜெர்மன் பெண்ணை மணந்து அங்கேயே வாழ்ந்தார். ஒரு தமிழ்ப்பெண்ணையே மணந்துகொள்ள வேண்டும் என்று விரும்பிய மகனுக்கு அவரது நண்பர் ஒருவர் தமது சகோதரியின் புகைப்படத்தைக் காண்பித்தார். அவருக்குப் பிடித்துக்கொண்டது. திருமணம் முடிந்துவிட்டது. மனைவியிடம் அவர் கேட்டுக்கொண்டது "நீ தமிழ்ப் பெண்ணாக, தமிழ்க்கலாசாரப்படி வாழவேண்டும்" என்பதுதான்!

0 0 0

மேற்கு ஜெர்மன், மேற்கு ஜெர்மன் என்று இப்படி ஓடித்திரியும் வாலிபர்கள் பலரும் பணத்தைச் செலவுசெய்து வெறுங்கையுடன் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் மேற்கு ஜெர்மனிக்குச் சென்ற ஒரு இளைஞர் நேற்றுக்காலை வெறுங்கையுடன் வீடு திரும்பினார். தம்முடன் மற்றும் பலர் திரும்பிவருவதாகவும் இங்கிருந்து சென்று தற்போதில் ஜெர்மன் சென்றுள்ளவர்களில் நாற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதமானோருக்கு ஆங்கில வாடையே கிடையாதென்றும் அவர்கள் படும் பாடு வேடிக்கை மட்டுமல்ல வேதனையானதும் என்று கூறினார் அந்த இளைஞர்.

அரசியல்தஞ்சம்கோரி ஜெர்மனிக்குத்தான் செல்லவேண்டுமா; உண்மையில் இங்கு இருக்கமுடியாதநிலை ஏற்பட்டால் அயலிலுள்ள இந்தியாவுக்கல்லவா எப்படியும் போய்ச்சேருவார்கள்? இடையில் கடலில்லாவிட்டால் யாழ்நகர் எரிந்தபோது பலர் இந்தியாவில் தஞ்சமடைந்திருப்பார்கள் என்பது உண்மையே! ஆனால் ஜெர்மனியில் இவ்வளவு தொகையானத் தஞ்சம் புகச்செல்லும் ஜெர்மானியர் நம்புவார்களா?

இந்தப் படையெடுப்பினால் உண்மையாகவே பாதிக்கப்பட்டுத் தஞ்சம் கோருபவர்களுக்குங்கூட இடங்கிடைக்காமல் போய்விடுமோ என்று பலரும் அஞ்சுகின்றனர்.

-ஊர்சுற்றி

மணியாசூழ் சிறப்புக்
கொண்டோன்
பராதிபுவனமெனாம்
பரம்பொருளாய்ப்
பார்துவக்கும் பண்பு
கண்டோன்
பேராரும் பாவலவன்
நாவலவன்
முத்தமிழ்க்கோர்பெருமை
தந்தோன்
நேராரும் இலா விபுலா
நந்தனெனும்
ஒண் தவத்து நிமலன்
வாழி!

அடிகளாரின் பசுமையான நினைவு என்றும் நின்று நிலவுவதாக!


## யாழ்.நகரில் மலிவு விலையில் பொருட்கள்...

- பேப்பர் வகைகள்
- மின்சார பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- வீட்டுப் பாவனைப் பொருட்கள்

°° நியூஸ் பிரின்ட் பேப்பர் °° பேங் பேப்பர்
(இறக்குமதி, உள்ளூர் செய்யப்பட்டது)
பேங் பேப்பர் கலர்.
வைட் பிரின்டிங் (22 1/2x35) (20x30) (D/C)
TISSUE (கிசு) (வெள்ளை பல வர்ணங்களில்)
GRAPE PAPER (பச்சை, சிவப்புடன், 10 வர்ணங்களில்)
°° பிறவுண் பேப்பர் °° டைப்பிங் பேப்பர்
கடிதஉறைகள் (பல அளவுகளில்)
பிளாஸ்டிக் குரோசரி பேக்ஸ் & (WEDDING BAG)

மின்சார அலங்காரப் பொருட்கள்
மின் விசிறிகள்
மின் அலங்காரப் பெண்டன்கள்
இஸ்திரிப் பெட்டிகள்
டோர்ச் லைட்டுகள்
பொக்கட் றேடியோக்கள்
கெசட் றேடியோக்கள்

இன்னும் பல பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட

அம்பலவாணர் அன் சன்ஸ்
196 கே. கே. எஸ். வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் எதிரில்)
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8291 தந்தி: 'வாணர்சன்ஸ்'



பயிர்ச் செய்கையில்
லாபம் பெருக்க
பங்கசு நோய்களை ஒழியுங்கள்

# டெல்சீன்

பயிர்களைக் காத்து
பணத்தைக் குவிக்கிறது

டெல்சீன்— காய்கறி, பழவகைத் தாவரங்கள், மலர்ச்செடிகள், நெற்பயிர் மற்றும் தானியப் பயிர்களை பங்கசு நோய்களில் இருந்து பாதுகாக்கும் விரிவான தொழிலியல்புடைய தரமான பங்கசு கொல்லி

டெல்சீன்— வருமுன்காக்கும்; வந்தபின் குணப்படுத்தும். உட்செறிந்து பரவும்; வெளித் தேங்கிநின்றும் பலன் தரும், மழைநீரில் கழுவுண்டு செல்லாத இயல்பினால் ஈரலிப்பான காலத்திலும் பாவிக்க உகந்தது.




LANKEM
லங்கெம் சிலோன் லிமிட்டெட்
760–762 பேஸ்லைன் வீதி,
கொழும்பு-9
தொலைபேசி: 98292 – 6

ஆகக்கூடிய சில்லறை விலை 100 கிறும் – ரூ. 20.40

# "தமிழ்இனத்தை திட்டமிட்டு தாக்கிவருகின்றனர்"

## அமிர்தலிங்கம் கருத்து

(யாழ்ப்பாணம்)

1972ம் ஆண்டில் இருந்து தமிழ்த்தேசிய இனம் தனது சொந்த மண்ணிலேயே தாக்கப்படுவதை ஆட்சியாளரின் காவல்படையினர் திட்டமிட்டு செய்துவருகின்றனர். 1974ம் ஆண்டு ஜனவரி 10ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தின் முன் நடந்த 9 பேரின் படுகொலைக்குப் பின்னரே தமிழரின் சிந்தனை திரும்பியது. ஆட்சியாளரின் காவல்படையினரின் அத்துமீறிய அடக்குமுறையின் காரணமாகத்தான் நாம் தனிநாடு கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது' என்ற நூலின் அறிமுகக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து சபையில் கூறியதாவது:-

இன்றைய ஐ. தே. கட்சி ஆட்சியோ அதற்கு முன்பு இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியோ நாம் அடிமை இனம் என்பதையே உறுதிப்படுத்தி வந்துள்ளன.

197 ஜூலை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற பயங்கரமாத படுகொலையை ஆட்சியாளர் மூடிமறைக்க முயற்சி செய்து வருகின்றனர். 1981-ல் இருந்து ஆட்சியாளரின் காவல்படையினர் தமிழ் மக்களின் நம்பிக்கை பெற்ற தலைவர்களை அழிக்க தேடி வருகின்றனர். தமிழ் தேசிய இனத்துக்கு ஒற்றுமையும் கட்டுப்பாடும் தேவை. எமது தமிழ் ஈழ இலட்சியத்தை அடைவதற்கு நாம் எடுக்க வேண்டிய வழிவகைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும் சர்வதேச மக்களிடமும் எமது

5ம் பக்கம் பார்க்க

# இன்னும் அபாயம் நீங்கவில்லை

-யோகேஸ்

[யாழ்ப்பாணம்]

"தமிழ் தேசிய இனம் விழிப்புடன் இருக்கவேண்டும். இன்னும் அபாயம் நீங்கவில்லை. தமிழ் இனம் தனது சொந்த மண்ணில் தனது பாதுகாப்பு பற்றி தீவிரமாக சிந்திக்க வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாண எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் மேற்படி கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். 1976ம் ஆண்டு செம்மணியில் நடைபெற்ற பாரசூட்டின் கொலை அதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள், 1977 இனக்கலவரம் சன்சோனி கமிஷன், 1978ல் கச்சேரியடியில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் ஆகியவற்றை தொடர்ந்து வடபகுதியில் பொலிசார் திட்டமிட்டு வன்முறைகள் எதுவும் செய்யலாம். மக்கள் தலைகுனிந்து வாழ்வார்கள் என பொலிசார் உணர்ந்துகொண்டனர்.

மே மாதம் 31-ந் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 8ந் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்கள் தமிழ்தேசிய இனத்தை பொறுத்தவரையில் சரித்திர ஏடுகளில் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.






# இவர்கள் இன்னும் எவ்வளவோ வளர வேண்டி இருக்கிறது.

உங்கள் பிள்ளைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியில் திளையுங்கள்.

மறவாதீர்கள்! வளரும் பருவத்தில் திடகாத்திரமான உடலுறுதியைப் பெற இவர்களுக்கு மேலதிக போஷாக்குச் சக்தி தேவை.

உங்கள் பிள்ளைக்கு நிறம் சுவைமிக்க நெஸ்பிறே கொடுங்கள். உலகின் வளம்மிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் நெஸ்பிறே 28% கொழுப்பும் விற்றமின் 'ஏ', 'டி' சத்துகளும் கொண்டிருப்பதால் வளரும் உடலுக்கு வலிமையூட்டுகிறது.




400 கிராம். ரூ. 22/50

ஒரு கிலோ ரூ. 78/75

Nestle®
ஒரு நெஸ்லே தயாரிப்பு

நெஸ்பிறே ... வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

Grant K & E 3903

3-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்) தினசரி
4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)
தொலைபேசி: 331

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பிரமீளா
கவரிமான் (கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
வெரஜி மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10 30, 2-30, 6-00, 9-30
தசாவதாரம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே!
சாந்தி (யாழ்நகர்) 10-30 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா,
தர்மராஜா (கலர்)
COMING 'COMA' The Number One Suspense Thriller

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-15 6-30 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-00, 7-00 9-45
The Man From Hong Kong
(Color-Karate Film)
வெகு விரைவில்!
சங்கராபரணம்

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(புத்தம்புதிய பிரதி — கலர்)
எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

வின்சர் தினசரி 10 30, 2-30, 6-00 இரவு 9-30
(யாழ்ப்பாணம்)
கமல், ரஜனி, ஸ்ரீதேவி
நடித்த
K. பாலசந்தரின்
மூன்று முடிச்சு
(புதிய பிரதி)
21-7-81 செவ்வாய் முதல்
அநேகரின் வேண்டுகோளை முன்னிட்டு
மீண்டும் திரையிடப்படுகிறது
"MOVING VIOLATION"
(Color)

பணம்பொருள் அபிவிருத்தி

## புதிய சபையின் பதவிக்காலம் 3 வருடம்

(கொழும்பு)

பணம்பொருள் அபிவிருத்திச்சபை புனருத்தாரணம் செய்யப்பட்டு பின்வருவோர் அதன் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தலைவர் திரு. எம். பி ஜெகநாதன் (செயலாளர் பிரதேச அபிவிருத்தி அமைச்சு) அங்கத்தவர்கள் திரு. கே. வெங்கடரட்ணம் மேலதிக அரசாங்க அதிபர் மட்டக்களப்பு, திரு. எஸ் வேலாயுதபிள்ளை (கூட்டுறவு உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்) திரு. எஸ். அலெக்சாண்டர் (முன்னைய பணிப்பாளர் வடபிரதேச போக்குவரத்துச்சபை யாழ்ப்பாணம்) திரு ஏ. மாணிக்கம் 6, யாழ் ரோட், யாழ்ப்பாணம்), திரு கே. கனகராஜா (அதிபர், கிளிநொச்சி சேப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்), திரு ஜோர்ஜ் மார்க் (முன்னைநாள் வங்காலை கிராமச்சபைத் தலைவர்).

இச்சபை மூன்று வருடங்களுக்கு இயங்கும். [மா]

## தமிழினத்தின் ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைபற்றி தீவிர பிரசாரம் செய்யவேண்டும். நாம் கட்டுக்கோப்பு இயக்கமொன்றை அமைத்துக்கொண்டு செயல்படவேண்டும்.

## வருடாந்த உற்சவம்

[மட்டக்களப்பு]

சரித்திரப் பிரசித்திபெற்ற மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த தீர்த்த உற்சவம் இம்மாதம் 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்தாம் நாள் 30-ம் திகதி ஆடி அமாவாசைத் தீர்த்தத்துடன் நிறைவு பெறுகிறது. [•]

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

## நல்லூர் திருவிழா சந்தை கேள்வி அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாக்கால தற்காலிக சந்தையில் கடைகள், கடை அறைகள் நிலங்கள், வாகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 30-7-81 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 5/-ம், பிணைப்பணமாக ரூபா 25/-ம் அலுவலகத்தில் செலுத்தியதன் பேரில் 30 07-81 வியாழக்கிழமை நண்பகல் 12-30 மணிவரை வழங்கப்படும் பத்திரத்தில் கேள்விகளை சமர்ப்பித்தல்வேண்டும்.

கேள்வி சம்பந்தமான நிபந்தனைகள், ஏனைய விபரங்கள் யாவும் மாநகரசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்,
17-07-1981. 0366

## அறிவித்தல்

டீசல் மோட்டார் வாகனங்கள் திருத்தும் மெக்கானிக்கும். உதவியாளர்களுக்குமான தற்காலிக பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கோரப்படுகின்றன.

1. மெக்கானிக்குக்கான தகைமைகள்

வயது — 25 — 45 இடைப்பட்டவர்.

அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சபைகளில் டீசல்வாகனங்கள் திருத்துவதில் 8 வருடங்களுக்கு மேல் அனுபவம் கொண்ட பயிற்றப்பட்ட மெக்கானிக்.

2. உதவியாளர் தகைமைகள் (Fitter)

வயது — 18 — 25 இடைப்பட்டவர்.

டீசல் மோட்டார் இயந்திரங்கள் பழுதுபார்ப்பதில் 5 வருடங்கள் சேவை செய்த அனுபவம்.

விண்ணப்பபடிவங்களையும் ஏனைய விபரங்களையும் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 4-8-81.

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் பல நோ. கூ
சங்கம். 15-7-81 0354

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடங்கள்

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் பூரணப்படுத்தப்பட்டு கல்வித் தராதரப் பத்திரப் பிரதிகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதி, அனுபவமிருப்பின் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரப் பிரதிகள் ஆகியவற்றுடன் 28-7-81ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் தலைவர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 1/- செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்பத்திரங்களைத் தபாலில் பெற விரும்புவோர் ரூபா 1/- தபால் கட்டளையுடன் சொந்த விலாசமிட்ட 5) சத முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம். பதவிகள் தற்காலிக நியமனங்களாகவே நியமிக்கப்படும்.

### [1] தட்டெழுத்தாளர் [தரம் II] தமிழ்

தகைமைகள்: (அ) தமிழ் தட்டெழுத்தை ஒரு பாடமாக ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப (சாதாரண) பரீட்சையில் சித்தியும், தமிழில் நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற வேகமும், (ஆங்கிலத் தட்டெழுத்து தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
(ஆ) வயதெல்லை 20—35

### [2] காவலாளர் [தரம் I]

தகைமைகள்: (அ) எட்டாம் வகுப்புச் சித்தி.
(ஆ) வயதெல்லை 25—40 வரை.

### [3] கிளை முகாமையாளர் [தரம் III]

தகைமைகள்: (அ) க. பொ. த. [சாதாரணம்] பரீட்சையில் 6 பாடங்களில் பெற்ற சித்தி.
(ஆ) வயதெல்லை 20—40 வரை

### [4] கிளை விற்பனையாளர்கள் [தரம் III]

தகைமைகள்: (அ) தரம் 8ல் பெற்றுள்ள சித்தி.
(ஆ) வயதெல்லை 20—35 வரை

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சட்டத்திற்கமைய நியமனங்கள் வழங்கப்படும். சங்க எல்லைக்குள் இருந்து வரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்
மானிப்பாய் பரிஷ் ப நோ. கூ. சங்கம்,
14-7-81 மானிப்பாய்.
0368

ராஜா (யாழ்ப்பாணம்)
பல காலமாக எம் ஜி ஆர். படம் இல்லையென ஏங்கிக்கொண்டிருந்த ரசிகர்களுக்கு 17-7-81 வெள்ளி முதல் குதூகல ஆரம்பம்.
வெள்ளி விழா சித்திரம்
மக்கள் திலகம் வசூல் மன்னன் எம் ஜி ஆர். மாறுபட்ட நடிப்பில் உருவாகி, வசூலில் பெருமளவை தேடித்தந்து நடிப்புக்கு இலக்கணம் வகுத்து இன்று உங்களுக்கு விருந்தளிக்க வந்துவிட்டது.
★ எம். ஜி. ஆர், ★ லதா
★ வீரப்பா ★ நம்பியார்

பல்லாண்டுவாழ்க
(ஈஸ்ட்மென் கலர்)

## நியூ கேம்பிறிட்ஜ்

திருநெல்வேலிச்சந்தி
A/L 82/83ம் ஆண்டிற்கான
வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள்
5-8-81ல் ஆரம்பமாகின்றன.
யாழ் நகர் முன்னணி
ஆசிரியர்களாலும்
பிரபல ஆசிரியர்களாலும்
கற்பிக்கப்படும்.
மேலதிக விபரங்கட்கு:
வி. எம். பாக்கியநாதன்


# காக்கைதீவுச் சந்தியில் சைக்கிள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

இரவு நேரத்தில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த இருவாலிபர்களை வழிமறித்த நான்கு பேர் அவர்களின் புத்தம் புதிய சைக்கிள்களை பறித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு காக்கைதீவுச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமை புரியும் அராலி வடக்கைச் சேர்ந்த எம். கோபாலநாதர், எஸ். பத்மநாதன் ஆகியோர் வீடு திரும்பும் போது காக்கைதீவுச் சந்தியில் இனந்தெரியாத நான்கு நபர்கள் இவர்களை வழிமறித்துப் பயமுறுத்தி இருவரதும் புத்தம் புதிய இரு சைக்கிள்களையும் பறித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இதுசம்பந்தமாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [கு]


யாழ். நகரில்
கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2"
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்
பெறநாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2 மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்


கிளிநொச்சி மா. அ. சபைப் பதவிப் பிரச்னை

# சாகும்வரை உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

தொகுதி விகிதாசார அடிப்படையில் கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணராசாவுக்கு மாவட்ட அபிவிருத்திச் சபையில் உறுப்பினர் பதவி கொடுக்கப்படவில்லையென்று ஆட்சேபம் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பரந்தன் கிளை செயலாளர் அருமைநாயகம் இன்று முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் திரு. அருமைநாயகம் பரந்தன் வைரவர் கோயில் முன்றலில் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பார்.

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி மீறி விட்டதாகக் கண்டித்து கிளிநொச்சித் தொகுதியின் சகல பகுதிகளையும் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி எம்.பி. திரு. ஆனந்தசங்கரியின் வீட்டுக்குமுன் ஆர்ப்பாட்டம் நடத்தவிருப்பதாவும் தெரிகின்றது.

மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள செல்லாத விதத்தில் கிளிநொச்சி எம்.பியை இவர்கள் மறியல் செய்யவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பின்னர் ஊர்வலமாகச் சென்று பரந்தன் வைரவர் கோயில் முன்றலுக்குச் செல்வார்கள் என்றும் அங்கு உண்ணாவிரதத்திலும் சிலர் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிகின்றது.

## கொக்குவில் புனித சின்னப்பர் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி புனித சின்னப்பர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று காலை நடைபெறும். விசேஷ பூசைப் பலியுடனும் அன்னதானத்துடனும் முடிவடைகின்றது. இன்று காலை விசேட பஸ்வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## 'சிவா' பிறந்த தினம்

[யாழ்ப்பாணம்]

கூட்டணித்தலைவர் திரு. அம்பலவாணர் சிவசிதம்பரத்தின் பிறந்த தினமான நாளை திங்கட்கிழமை ஆலயங்களில் விஷேச பூசைகளை நல்லூர் தொகுதிக்கிளை ஒழுங்குசெய்துள்ளது.

யாழ், பழம் வீதிப்பிள்ளையார் கோவில் பூசைக்கான ஒழுங்குகளை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. சி. நாகராசாவும், யாழ். மாநகரசபைஉறுப்பினர்திரு சு. சண்முகராசாவும் செய்துள்ளனர். [கு]

## தமிழர் கூட்டணி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. பாலாதம்புவும், கீர்த்தி சேனவிரத்தினவும் கையெழுத்திட்டுள்ளனர்.

மேற்படி அறிக்கையின் பின்வரும் கருத்துக்களும் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணி கோரியிருப்பது போன்று யாழ்ப்பாண பொலிசார் இன அடிப்படையில் நியமிக்கப்படுவதின் மூலமும் ராணுவத்தினர் முகாம்களிலேயே இருக்கச்செய்வதின் மூலமும் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களை மீண்டும் நடைபெறாமல் தடுத்துவிட முடியாது, வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் சுய நிர்ணய ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் இப்பகுதி மக்களின் பிரச்னைகளை இந்த யூ. என். பி. அரசோ அல்லது வேறுஎந்த அரசோ ஜனநாயக முறையில் தீர்த்துவைக்க மறுத்து வரும் வரை இந்த வன்செயல் திரும்பவும் நடைபெறுவதைத் தவிர்க்கமுடியாது.

வடக்குகிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் மீதும் தமிழ்பேசும் மக்கள் மீதும் குறிப்பாக தோட்டப் பகுதி தமிழ் மக்கள் மீதும் இன அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதும் அவர்களை நசுக்கி ஒடுக்கி வைத்திருப்பதுமே யாழ்ப்பாணத்தில் நிலவும் பிரச்னைக்கும் அங்கும் ஏனைய பகுதிகளிலும்இனவாத வன்செயல்கள் வெடிக்கக்கூடிய சூழ்நிலை எப்பொழுதும்இருந்து வருவதற்கும் அடிப்படை காரணமாகும்.

மக்களின் ஜனநாயக உரிமைகள் மீது யூ. என். பி. அரசு மேற்கொள்ளும் தாக்குதல்களையும் நாட்டில் இன அடிப்படையிலான பாகுபாடுகள் நிலவுவதற்கு விசேஷமாகவும் நேரடியாகவும் அதற்கு பொறுப்புண்டு என்பதனையும் நாம் கண்டிக்கின்றோம். அரசியல் எதிர்ப்புக்களை வன்முறையால் நசுக்கிவிடும் அரசாங்கத்தின் கொள்கையையும் நாம்கண்டிக்கின்றோம்.


## மெஷின் மைண்டர் தேவை

அச்சடிக்கும் இயந்திரம்] இயக்குவதிலும் திருத்துவதிலும் அனுபவமும் தேர்ச்சியும் உள்ளவர்கள் தேவை. வயது, அனுபவம் ஆகியவற்றை குறிப்பிட்டு நற்சாட்சிப் பத்திரப்பிரதிகளுடன் 25-7-81ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 0384
C/o ஈழநாடு லிமிட்
யாழ்ப்பாணம். 0384



## அதிர்ஷ்ட இலாபச்சீட்டு

16-07-81 அன்று இடம்பெற்ற மல்லாகம்; கல்லாரை வீரபத்திரர் தேவஸ்தாபன அதிர்ஷ்ட இலாபச்சீட்டு பரிசுக்குரிய இலக்கங்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| [1] | 6626 | [11] | 3869 |
| [2] | 4730 | [12] | 6826 |
| [3] | 3877 | [13] | 4709 |
| [4] | 2175 | [14] | 6931 |
| [5] | 4623 | [15] | 9152 |
| [6] | 4242 | [16] | 4880 |
| [7] | 4421 | [17] | 6744 |
| [8] | 0839 | [18] | 8600 |
| [9] | 4460 | [19] | 8771 |
| [10] | 6649 | [20] | 2034 |

இங்ஙனம்
தொண்டர் சபையினர்

குறிப்பு: பரிசில் பெறத் தகுதியுள்ளவர்கள் (15-08-81) அன்றைய தினத்திற்கு முன்பு பெற்றுக் கொள்ள வேண்டும்.

0379



## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள டற்சன் [Datsun 120Y] கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- திருமதி M. இராசரத்தினம், நீர்வேலி, ஏழாலை தெற்கு, சுன்னாகம். 0386


# பத்திரிகையாளரிடமிருந்த 'ஈழநாடு' பிரதிகள் பறிமுதல்

வாஷிங்டன், ஜூலை. 10

இலங்கை கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இலங்கை பத்திரிகையாளர் ஒருவர் விமான நிலைய அதிகாரிகளால் நீண்ட நேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அவரது உடைமைகள் பரிசோதிக்கப்பட்டு அவற்றினுள் காணப்பட்ட பல செய்திப்பத்திரிகைகள் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மேற்படி பத்திரிகையாளர் ஜூன் மாதம் 25ம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பேர்லின் ஊடாக லண்டன் சென்று அமெரிக்கா செல்லும் பொருட்டு பிரயாணத்துக்கு தயாரானார் விமான நிலையத்தில் சுங்க பரிசோதனை முடிவடைந்து குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் நாடடை விட்டு வெளியேறும் அனுமதியையும் வழங்கிவிட்டார்கள். இவரது பாஸ்போர்ட்டில் 'எம்பார்க்' சீலும் குத்தப்பட்டு விட்டது.

இந்நிலையில் விமானம் புறப்படுவதற்கு அரைமணிநேரம் இருந்த வேளையில் பிரயாணிகள் தரித்திநிந்த மண்டபத்தினுள் நுழைந்த அதிகாரிகள் சிலர் பிரயாணிகள் மீது மேப்பம் விட்டபடி இருந்தனர். அப்போது பத்திரிகையாளராகிய இந்தப்பிரயாணியை அணுகிய ஒரு அதிகாரி 'ஜோர்னலிஸ்டா' என்று வினவினார் 'ஆம்' என்று பதிலளித்ததும் அவரது உடமைகளுடன் வருமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டது. அங்கே அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

அவரது பிரயாண நோக்கம் பற்றி அதிகாரிகள் விசாரித்தனர். பேர்லின் சென்று அங்கிருந்து லண்டன் ஊடாக அமெரிக்கா செல்ல விருப்பதாக இவரால் விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் இவரது பெட்டி திறக்கப்பட்டு சடும் சோதனை செய்யப்பட்டது. அதனுள் காணப்பட்ட பல "ஈழநாடு" பத்திரிகைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

## ரூ. 1,25,000..

[1ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு லொறி, ஒரு வான் ஆகியவை சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி இரண்டரை லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். சுங்கப் பகுதியைச் சேர்ந்த சுங்கத்தடை உத்தியோகத்தர்களான திரு. ஏ. பொன்னையா, திரு. உபாலி பெரேரா தலைமையில் சுங்கக் கோஷ்டி, நேற்று முன்தினம் இரவு முதல் கரையூர், நாவாந்துறை பகுதிகளில் ரோந்து நடவடிக்கையிலீடுபட்ட போது, பொலிஸாரின் உதவியுடன் கடத்தல் வேட்டை நடைபெற்றது.

யாழ். சுங்கப்பகுதியில் நேற்று இரவு ஒன்பது மணிவரை விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. விசாரணைகளை உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனாரத்தின, சப் கலெக்டர் திரு. என். கந்தசாமி நடத்துகின்றனர். 15 பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## மூன்று மாதத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 5 மணித்தியாலம் வரை நடைபெற்றது பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

### தீர்மானங்கள்

எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தின் போது தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பிக்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதை கூட்டணியின் பாராளுமன்றக் குழுவே முடிவுசெய்யவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களையொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக்குழு அரசாங்கத்திற்கு சமர்ப்பித்த 5 அம்சக்கோரிக்கையும், அதனையொட்டி பாராளுமன்றக்குழு பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பது என்று எடுத்த முடிவையும் அங்கீகரிப்பதுடன் அடுத்த 3 மாத காலத்துக்குள் இக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்றுதபட்சத்தில் இக்கோரிக்கைகளைப் பெறுவதற்கு போராட்டத்திட்டங்களை மத்திய செயற்குழுவிடம் ஒப்படைப்பதென்று பொதுச்சபை தீர்மானிக்கிறது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இதுவரை மாவட்டரீதியாக நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தும் தொகுதி, கிராம, ரீதியாக நடாத்துவது.

அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமாக ஆதரவுக் கூட்டங்கள் மற்றும் ஹர்த்தால் ஆகியவற்றை நடத்துவது சம்பந்தமாக ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கலந்து பேசி, வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்கு த. வி. கூட்டணி தலைமைப் பீடத்தை பணிப்பதென்று பொதுச்சபை தீர்மானிக்கிறது.


## தேவை

ஆண்பிடவை விற்பனையாளர் தேவை அண்மையில் உள்ளோரும், பிடவை அனுபவம் உள்ளவரும் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் 25-7-81 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அஜந்தாஸ், 54 பெரியகடை, யாழ்ப்பாணம். 0380


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 8ம் இலக்கத்திலுள்ள சொந்த அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. Regd No. QB 100286/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 389, 8126